அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.31/89(1)

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு.7
1989, நவம்பர் 23ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

**சகல நடுத்தர தொழிநுட்ப சேவையின் விதிகளை செயற்படுத்தல்.**

1989.05.09ஆந் திகதியுடைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.31/89 தொடர்பானது,

02. தேசிய தொழில் பயிலுநர் சபையால் சான்றிதழ்களின் பட்டச் சொற்களை பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது.-

| முன்னர் | இப்பொழுது |
|---|---|
| 1) விசேட எந்திரவியல் தொழில் பயிலுநர் சான்றிதழ் | தேசிய சிறப்புத் தொழிற் பயிற்சிச் சான்றிதழ் |
| 11) எந்திரவியல் தொழிநுட்பவியலாளருக்கான தேசிய டிப்புளோமா பட்டம். | எந்திரவியல் விஞ்ஞான தேசிய டிப்புளோமாப் பட்டம் |

03. சான்றிதழ்களின் பட்டச் சொற்களில் ஏற்பட்ட மாற்றங்களை கருத்தில் கொள்ளவும்.

04. மேற்கூறிய சான்றிதழ் தகுதியுடன் நடுத்தர தொழிநுட்ப சேவையில் 111ஆம் வகுப்புக்கு நியமனம் செய்யப்பட்டவர்கள் - முதலாம் திணைக்களப் பரீட்சையிலிருந்து விலக்களிக்கப்படல் வேண்டும்.

ஒப்பம்: பி.என்.எம். பெர்னாந்து.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

## பத்திரிகை அறிவித்தல்

1980 யூலை மாதத்தில் பதவிகளை வெறிதாக்கிய அரசாங்க உத்தியோகத்தர்கள் கூட்டுத்தாபனங்களின் பணியாளர்கள் ஆகியோருக்கு நிவாரணம் வழங்குதல்.

---

1. மேற்குறித்த விடயம் தொடர்பில் அரசாங்கம் பின்வரும் தீர்மானங்களை எடுத்து உள்ளது.

(1) 1980 யூலை மாதத்தில பதவி விலகல் செய்து மீண்டும் சேவையில் நிறுவப் பெறுதவர்கள், இளைப்பாறல் மற்றும் ஏனைய நிவாரணம் வழங்கப் பெறுதவர்கள் ஆகியோர் யாவருக்கும் மிகவும் சாதகமான ஓய்வூதிய நலன்கள் வழங்கப்படும். இவ்வூழியர்கள் யாவரும் அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்ட திகதிவரை இடையறாச் சேவையுள்ளவர்களாகக் கருதப்படுவர். 1980 யூலை மாதம் தொட்டு அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்ட நாள்வரை சம்பள ஏற்றங்கள் முறைப்படி கொடுக்கப்பட்டு அவர்தம் சம்பளத்துக்கு சேர்ந்துள்ளவென்னும் உத்தேச அடிப்படையில் அவர்களது ஓய்வூதியங்களும், இளைப்பாறல் நலன்களும் கணிக்கப்படும். ஓய்வூதியத்தை அல்லது இளைப்பாறல் நலன்களை வழங்குவதற்குரிய சேவைக் காலம் கணக்கிடுமிடத்து, அதனுக்கு வரும் இளைப்பாறல் திகதியாக அல்லது சேவை முடிவுறுத்தல் திகதியாக இந்த அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்ட திகதி அல்லது குறிப்பிட்ட உத்தியோகத்தர் ஐம்பத்தைந்து வயதினைப் பூர்த்தி செய்த திகதி எடுத்துக் கொள்ளப்படும்.

(2) 366ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கையின் வண்ணம் வழங்கப் பெற்ற இளைப்பாறல் மற்றும் ஏனைய நலன்களைப் பெற்றுக் கொண்டோர்கள் விடயத்தில் அவர்கள் ஏலவே பெற்றுள்ள ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள் மற்றும் பிற நலன்கள் யாவும் மேற்போந்த நியதிகளுக்கேற்ப மீள ஆய்ந்து சரிசெய்யப்படும்

(3) 1980ஆம் ஆண்டு யூலை மாதத்தில அரசாங்க, உள்ளூராட்சி, கூட்டுத்தாபனத் துறைகளில் தகுதிகூர் நிலையிலோ தற்காலிக நிலையிலோ பணிக்கமர்த்தப் பெற்றிருந்த ஊழியர்களின் ஓய்வூதியங்களும் ஏனைய இளைப்பாறல் நலன்களும் இந்நோக்கத்துக்கென கணிக்கப்படுமிடத்து இவ்வமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்ட திகதிவரை அவர்கள் தொடர்ந்து சேவையாற்றியுள்ளவர்களாக கருதப்படுவர்,

(4) அரசாங்க, உள்ளூராட்சி மற்றும் கூட்டுத்தாபன துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களில் சேவையாற்றிய பாதிக்கப்பட்ட ஊழியர்கள் பெற்றுக் கொண்ட கடன் தொகைகள் மீதான வட்டி அறவிடப்படாது. ஆனால் கடன்களுக்குரிய முதலாவது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கட்குக் கொடுமதியான ஓய்வூதியம், பணிக்கொடை மற்றும் பிற கொடுப்பனவுகளிலிருந்து கழிக்கப்படும்.

(5) இளைப்பாறலுக்கான விருப்பத்தைத் தெரிவிக்காமல் அல்லது பணிக்கொடைகளையோ பிற நலன்களையோ பெற்றுக் கொள்ளாமல் இறந்த ஊழியர்களது மனைவி/கணவன்மார்களும் அண்டி வாழ்வோர்களும் இறந்தவர் இத் தீர்மானம் எடுக்கப்பட்ட திகதி வரை அல்லது ஐம்பத்தைந்து வயது நிரம்பும் திகதி வரை தொடர்ந்து சேவையில் இருந்தவராகக் கருதப்பட்டு ஓய்வூதியத்தினையும் பணிக்கொடையினையும் பிற நலன்களையும் பெறுதற்கு உரித்துடையவராவர்.

(6) மேற்போந்த நியதிகளின் வண்ணம் இளைப்பாறியவர்களாகக் கருதப்பெறும் ஊழியர்கள் யாவரும் அவர்களது வயது, அனுபவம், தகைமைகள், வினைத்திறமை ஆகியவற்றுக்கேற்ப மீண்டும் சேவையில் அமர்த்தப்படத் தகவுடையவர்களாகவும் கணிக்கப் பெறுவர். அவர்கள் அரசாங்கத் திணைக்களங்களிலோ உள்ளூராட்சி அதிகார சபைகளிலோ, கூட்டுத்தாபனங்களிலோ நியதிச்சட்ட சபைகளிலோ மீண்டும் சேவைக்கு அமர்த்தப்படலாம். எனினும் மீள் சேவைக்கு அமர்த்தும் விண்ணப்பங்கள் யாவும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்களின் மீள் சேவைக்கு அமர்த்துகைக்கான செயலாளர்கள் துணைக் குழுவின் அங்கீகாரத்தை நாடுவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சினால் சிபார்சு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(7) 1980 யூலை மாதத்திலிருந்து சேவையில் மீள நிறுவப்பெற்ற அரசாங்க உள்ளூராட்சி மற்றும் கூட்டுத்தாபனத் துறைகளைச் சேர்ந்த ஊழியர்களின் மீது பல்வேறு பொது நிருவாகச் சுற்றறிக்கைகளின் வாயிலாக விதிக்கப் பெற்றிருந்த மட்டுப்பாடுகள் வாபஸ் பெறப்படும்.

(8) 1980 யூலை மாதத்தில் பதவி விலகல் செய்த தனியார்துறை ஊழியர்கள் அனைவருக்கும் அரசாங்கத்துறை ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற இதே சலுகைகளை வழங்கி நிவாரணம் அளிக்க வேண்டுமென தனியார்துறைப் பணிகொள்வோர்களை தொழிலமைச்சு கேட்டுக் கொள்ளும்.

2. 1980 யூலை மாதத்தில் பதவிகளை வெறிதாக்கிய, இதுவரையில் அப்பதவிகளில் மீள /அமர்த்தப்படாத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும், கூட்டுத்தாபனப் பணியாளர்களும், தமது பதவிகளில் மீள அமர்த்தப்படு முன்னர் மரணமுற்ற அத்தகைய உத்தியோகத்தர்களில்/பணியாளர்களில் தங்கியிருப்பவர்களும் தத்தமது பிரதேசத்துக்குரிய உதவி அரசாங்க அதிபர்களுடன் தொடர்பு கொண்டு நிவாரணப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

3. இணைப்படிகளில் வேண்டிய விபரங்களை நிரப்பி அவற்றை திரு. கே. அப்புத்துரை அவர்கள், பிரதித் தாபனப் பணிப்பாளர் (எச்-கிளை) அரசாங்க நிருவாக, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சு, சுதந்திரச் சதுக்கம், கொழும்பு. 7 என்ற முகவரிக்கு நேராக, இயன்ற வரையில் கெதியாகக் கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்குமாறு அவர்கள் வேண்டப்படுகிறார்கள்.

(சிறில் கமகே)
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

## நிவாரணப் படிவம்

) 1980 யூலை மாதத்தில் பதவிகளை வெறிதாக்கிய, இதுவரையில் அப்பதவிகளில் மீண்டும் அமர்த்தப்படாத அரசாங்க உத்தியோகத்தர்கள், கூட்டுத்தாபனப் பணியாளர்களுக்கும் (2) பதவிகளில் மீண்டும் அமர்த்து முன்னர் மரணமான அரசாங்க உத்தியோகத்தர்கள், கூட்டுத்தாபனப் பணியாளர்களில் தங்கியிருப்போருக்கும் நிவாரணம் வழங்குதல்.

---

(பின்வரும் தகவல்களை இவ்விடைவெளிகளில் நிரப்பி திரு. கே. அப்புத்தந்திரி அவர்கள், பிரதிப் பணிப்பாளர் (எச்-கிளை) பொது நிருவாக, மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, சுதந்திரச் சதுக்கம், கொழும்பு. 7 என்ற முகவரிக்கு கூடிய விரைவில் கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்குமாறு தாங்கள் வேண்டப்படுகிறீர்கள். படிவத்தை நிரப்புவதற்கு முன்னர் படிவத்தின் இறுதியில் உள்ள அறிவுறுத்துரைகளை வாசிக்குமாறு தாங்கள் கேட்கப்படுகிறீர்கள்.)

### பகுதி - அ

### 1980 யூலை மாதத்தில் பதவியை வெறிதாக்கிய உத்தியோகத்தர் தொடர்பான விபரங்கள்.

---

1. உத்தியோகத்தரின் பெயர்:
2. தனிப்பட்ட முகவரி:
3. வகித்த பதவியும் தரமும்:
4. பிறந்த திகதியும் 89.05.08இல் வயதும்:
5. முதல் நியமனத் திகதி:
6. 55ஆம் பிறந்த நாள் நிகழும் திகதி:
7. பதவியை வெறிதாக்கிய திகதியில் சேவையாற்றிய ஆண்டுகளின் எண்ணிக்கை:
8. வகித்த பதவி நிரந்தரமானதா, ஓய்வூதியமுடையதா, தற்காலிகமானதா, அமய நிலையினதா:
9. ஓய்வூதியத்துக்கு உரித்துடையராதற்குப் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்ய வேண்டிய அரசாங்க சேவையில் வகித்த பதவி தொழிலாளர் தரப் பதவியா (தாபன விதிக்கோவையின் 1/ ஆம் அத்தியாயத்தின் 6:4ஆம் பிரிவின் கீழ்):
10. 1980 யூலை மாதத்தில் பதவியை வெறிதாக்கிய நேரத்தில் உத்தியோகத்தர தகுதிகூர் நிலையில் இருந்தவரா (இந்தத் தகவல் பதவியை வெறிதாக்கிய தகுதிகூர் நிலையினருக்கு நிவாரணம் வழங்குவதற்குத் தேவையானது):

11. பதவியை வெறிதாக்கிய நேரத்தில் உத்தியோகத்தர் சேவையாற்றிய அலுவலகத்தின் அல்லது நிறுவனத்தின் பெயரும் முகவரியும்:

12. மேற்குறித்த அலுவலகம் அல்லது நிறுவனம் 1980இல் எந்தத் திணைக்களத்தின் கீழ் தொழிற்பட்ட என்பது:

13. மேற்குறித்த திணைக்களம் 1980இல் எந்த அமைச்சின் கீழ் தொழிற்பட்ட என்பது:

14. உத்தியோகத்தர், அவர் ஓய்வூதியம் ஒன்றுக்கு உரித்துடையவராக இருந்தால் ஓய்வுபெற விரும்புகிறாரா அல்லது அவர் ஓய்வூதியம் ஒன்றுக்கு உரித்துடையவராக இல்லாது இருந்தால் 89.05.11ஆம் திகதிய இல.32/89 சுற்றுநிருபத்தின் நெறிமுறையின் அடிப்படையில் பணிக்கொடை ஒன்று மீது ஓய்வு பெற விரும்புகிறாரா:

## பகுதி 1 - ஆ

15. நியமிப்பு அதிகாரி, மீண்டும் பணிக்கமர்த்த உலப் பரிசீலனை செய்யக் கூடிய சந்தர்ப்பம் இருக்குமிடத்து நீர் 89.05.11 ஆம் திகதிய இல.32/89 சுற்றுநிருபத்தின் நெறிமுறைகளுக்கு அமைய, மீண்டும் பணிக்கு அமர்த்தப்பட விரும்புகிறீரா என்பதைக் குறிப்பிடுக.

பகுதி 11

## மரணமுற்ற உத்தியோகத்தரில் தங்கியிருப்போர் தொடர்பான விபரங்கள்

(பதவியை வெறிதாக்கிய உத்தியோகத்தர்/பணியாள் மரணமுற்ற சந்தர்ப்பத்தில் பகுதி 1க்கு மேலதிகமாக 16ஆம் 17ஆம் பிரிவுகளையும் பூர்த்தி செய்க. தங்கியிருப்போரில் எவரேனும் ஒருவர் படிவத்தில் ஒப்பமிடலாம்.)

16. மரணமுற்ற உத்தியோகத்தர்/பணியாள் பொது நிருவாகச் சுற்று நிருபத்தின் 366இன் கீழ் ஓய்வு பெறுவதற்கு அல்லது பணிக்கொடையைப் பெறுவதற்கு விருப்பம் தெரிவித்திருந்தாரா. அவ்வாறு தெரிவித்திருந்தால் அவர் அத்தகைய ஓய்வூதியத்தை அல்லது பணிக்கொடையை பெற்றுள்ளாரா?

17. தங்கியிருப்போரின் பெயர்களும் மரணமுற்ற உத்தியோகத்தருடன் அவர்களுக்குள்ள உறவு முறையும்.

| பெயர் | மரணமுற்றவருடனான உறவு முறை | வயது | தொழில் வாய்ப்புப் பெற்றுள்ளாரா |
|---|---|---|---|
| | | | |

மேலேயுள்ள விபரங்கள் சரியானவையென நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

.................................................

உத்தியோகத்தரின்/பணியாளரின்/வாழ்க்கைத் துணையின்/தங்கியிருப்போரின் கையொப்பம்.

## படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

(1) இந்தப் படிவம் இரண்டு படிகளிற் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும் (படிவம் கையால் எழுதப்பட்டிருக்கலாம் அல்லது தட்டெழுத்தில் அமைந்து இருக்கலாம்.)

(2) தரவுகள் சரியானவையாகவும் பூரணமானவையாகவும் இருத்தல் வேண்டும். பொருத்தமற்ற பிரிவு ஏதுவாயினும் அதை நீக்கி விடுக.

(3) பதவியை வெறிதாக்கிய உத்தியோகத்தர்/பணியாளர் மரணமுற்றிருந்தால் அவரில் தங்கியிருப்போர்களில் ஒருவர் பகுதி 1, பகுதி 11 ஆகிய இரண்டையும் பூர்த்தி செய்தல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பங்களில் 14ஆம், 15ஆம் பிரிவுகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய அவசியமில்லை.